முற்பகல் 10–55

3. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

சென்னை, கோயம்பேடு திருமங்கலீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான நிலம், C.M.D.A. நிபந்தனைகளை மீறி தனியார் கட்டுமான நிறுவனம் முறைகேடாகப் பயன்படுத்தி வருவது—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: One minute. நான் demand–க்குப் போயாகிவிட்டது. *(குறுக்கீடுகள்)* என்ன இது? *(குறுக்கீடுகள்)* எல்லோரும் அமைதியாக உட்காருங்கள் முதலிலே. *(குறுக்கீடுகள்)* நீங்கள் சொல்வதை நான் புரிந்துகொண்டேன். *(குறுக்கீடுகள்)* நீங்கள் சொல்வதை நான் புரிந்துகொண்டேன், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பரிதி இளம்வழுதி அவர்கள் பத்திரிகையில் வந்த செய்தியைத்தான் அப்படிச் சொல்லி இருக்கிறார்கள் என்று நாங்கள் எண்ணுகிறோம். *(குறுக்கீடுகள்)* ஒருவேளை தாங்கள் கூறுவது போல் அப்படிப்பட்ட சொல் இருந்தால் தயவுகூர்ந்து அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடலாம் என்று நான் அவைத் தலைவரை உங்கள் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ** என்று சொன்ன அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் தீர்ப்பின்மீது எந்தக் கருத்தும் சொல்ல நான் விரும்பவில்லை. ஆனால் ஒரு திருத்தம். ** வேப்பெண்ணெய் வடிந்திருக்கிறது. வேப்பெண்ணெய் வடிந்திருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.பி. அன்பழகன். *(குறுக்கீடுகள்)* அடிக்கடி எழுந்திருந்து நிற்காதீர்கள். உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* வேறு சப்ஜெக்டிற்குப் போயாகிவிட்டது. நீங்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.